வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017

## Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | இந்துநாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| (1) 2 | (11) 3 | (21) 1 | (31) 2 | (41) 4 |
| (2) 2 | (12) 3 | (22) 1 | (32) 3 | (42) 2 |
| (3) 5 | (13) 3 | (23) 1 | (33) 3 | (43) 5 |
| (4) 5 | (14) 2 | (24) 2 | (34) 5 | (44) 3 |
| (5) 2 | (15) 4 | (25) 5 | (35) 4 | (45) 4 |
| (6) 5 | (16) 1 | (26) 4 | (36) 1 | (46) 5 |
| (7) 1 | (17) 1 | (27) 4 | (37) 3 | (47) 1 |
| (8) 1 | (18) 1 | (28) 5 | (38) 1 | (48) 2 |
| (9) 5 | (19) 1 | (29) 5 | (39) 3 | (49) 3 |
| (10) 1 | (20) 5 | (30) 4 | (40) 5 | (50) 3 |

(1) அ)
- பழமை வாய்ந்ததாகும் (புரா + தானம்)
- பண்பாடு, சமயம், தத்துவம், கலை, இலக்கியம், வரலாற்றுச் செய்திகள் கூறப்படுகின்றது
- தெய்வீக வரலாறுகள், தெய்வீக பரத்துவம் கூறப்படுகின்றது
- பஞ்ச லட்சணம், தசலட்சணம் போன்ற மூர்த்தி மரபுகள்
- சமய நெறிகள், வழிபாட்டு முறைகள் மூர்த்தி, தலம், தீர்த்தம், தவம், விரதம், தலயாத்திரை, தோத்திரம், சிராத்தம் போன்ற விடயங்கள்
- மனித கடமைகள், ஆச்சிரம தர்மங்கள், புருடாத்தங்கள் போன்ற தர்ம நெறிகள்
- சோதிடம், வானியல், சிற்பம், கலை,கணிதம், புவியியல் போன்ற அறிவியல் சிந்தனைகள்
- அரசியல், தர்மம், கலை மரபுகள் கொண்டவை

ஆ)
- சைவ, வைணவ, சாக்த,காணபத்திய. கௌமார சௌரவ நெறிகள், புராணங்களில் கூறப்பட்டுள்ளன.
- கடவுள் நம்பிக்கைக்கு முதன்மை வழங்கும் மும் மூர்த்தி வழிபாடுகள்
- ஆலய வழிபாடுகள், தல யாத்திரைகள், உருவ வழிபாடு விரதம், தலச் சிறப்புகள் முதலிய சமய நெறிகளின் விருத்திக்கு காரணமாக அமைந்தமை
- தெய்வங்கள் தொடர்பான கதைகள், தெய்வங்களின் தத்துவத் தொடர்புகள்
- வேத அத்தியாயங்களும் தோத்திரங்களும் இடம் பெற்றன.
- கிரியை வழிபாடுகள் பூசை முறைகள்
- சண்மத நெறிகள், இறை நம்பிக்கை, வழிபாட்டு அம்சங்கள் சமய ஆசாரங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்

இ)
- பஞ்சலட்சணங்களில் வம்ச வரலாறுகள் கூறப்படுகின்றது
- புராணங்களில் கூறப்பட்ட யுகங்கள் அரச வரலாறுகளுடன் தொடர்பானவை
- நந்த வம்சம், சூரிய வம்சம் ஆகிய அரச வம்சங்கள்
- சாதவாகன, சுங்கர், குஷாண வரலாறுகள்
- அரசர்கள் தெய்வ அம்சம் பொருந்தியவர்கள்
- மகதம், கோசலம் முதலிய ஆட்சி பற்றிய கருத்துக்கள்
- யாகங்கள் பற்றிக் கூறும் போது அரச வம்சங்கள் கூட்டிக் காட்டப்பட்டுள்ளன.
- கி.மு 6 தொடக்கம் குப்தர் காலம் வரையான அரசர்களின் வரலாறுகளைப் பற்றி அறிய உதவுகின்றன.

ஈ) • சிவ, விஷ்ணு, சத்தி பரத்துவங்கள்
• உலக உற்பத்தி பற்றிய கருத்துக்கள்
• பிரமனது உந்திக் கமலத்திலிருந்து உலகம் படைக்கப்பட்டது
• அவதார தத்துவம் - தர்மம் நிலை நாட்டும் நோக்கு
• தெய்வீக கதைகள், தெய்வீக வடிவங்கள் தத்துவ நோக்குடையவை
• தவம், விரதம், தீட்சை,போன்றன ஆன்மீக நோக்குடையவை
• சைவ சித்தாந்த தத்துவ தொடர்பு
• கடவுள், ஆன்மா, பிரபஞ்சம், கர்மவினை, மறுபிறப்பு ஆன்மீக விடுதலை போன்ற விடயங்கள்

(5 +5+5+5=20 புள்ளிகள்)

(2) அ) • ஸ்ரீ குப்தர், கடோத்கய குப்தர், சமுத்திர குப்தர் ,சந்திரகுப்தர், குமார குப்தர், ஸ்கந்த குப்தர் போன்றவர்களின் ஆதரவு சிறப்பானது.
• இவர்களது பணிகளால் சமயம், கலை, கல்வி, பண்பாடு வளர்ச்சி கண்டது
• சந்திர குப்தர் காலத்தில் கோயில் கட்டட அமைப்பு, அரச சின்னம் அறிநீதி போன்றவற்றில் வளர்ச்சி ஏற்பட்டது.
• பிரமாணர்களுக்கு தானம் வழங்கினர்
• வைதீகக் கல்விக்கு முதன்மை கொடுத்தனர்
• வைதீக மரபுகளைப் பேணிப் பாதுகாத்தனர்
• சமயச் சின்னங்களை அரச சின்னங்களாக பொறித்தமை
• சாசனங்களில் மன்னர்கள் பரமபாகவத, மகேஸ்வர பரமேஸ்வர எனும் விருதுபட்டங்களை சூட்டியிருந்தனர்
• தேவ ஸ்ரீ மகா ராஜாதி ராஜன் என 2ம் சந்திர குப்தன் நாணயங்களில் பொறித்தமை
• இறைவழிபாடு, பக்திமரபு, திருக்கோயில் பண்பாடு விழாக்கள் முக்கியத்துவமடைந்தன.
• திக்குபாலர் வழிபாடு, தசாவதாரக் கோட்பாடு, சிறப்படைந்தமை

ஆ) • சமஸகிருத மொழி உன்னத நிலை அடைந்தமை
• இராமாயணம், மகாபாரதம் இறுதி வடிவம் பெற்றமை
• வாயு புராணம், மத்சய புராணம், ஸ்மிருதிகள் தோற்றம் பெற்றமை
• காளிதாசன், பாரவி பாணர், தண்டி முதலிய வடமொழிப் புலவர்களின் நூல்கள்
• சாகுந்தலம், குமார சம்பவம், ரகுவம்சம், விக்கிரமோர் வசீயம், மாளவிகாக்னிமித்திரம் போன்ற நாடக இலக்கியங்கள்
• சோதிட இலக்கியங்கள், மருத்துவ நூல்கள்
• ஆரிய பட்டரின் ஆரிய பட்டீயம்
• தத்துவ உரைகள் பக்திப்பாடல்கள், இலக்கண நூல்கள்
• காம சூத்திரம், கீதா கோவிந்தம், தசகுமார சரிதம் தேவி சந்திர குப்தம்,இராவண வதம், நீதிசாரம், அமர சேகரம், நவநீதகம் போன்ற நூல்கள்

இ) • அமைக்கப்பட்ட ஆலயங்கள் கட்டடக்கலை, சிற்பக்கலை வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதோடு இந்து சமய வளர்ச்சிகளையும் சிறப்புக்களையும் சுட்டுகின்றது
• உத்திர பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம் போன்ற இடங்களில் கோயில்கள் எழுந்தன
• சிவன், விஷ்ணு, சக்தி போன்ற தெய்வங்களுக்கு கோயில்கள் நாகர கலைப் பாணியில் அமைக்கப்பட்டன.
• செங்கல், கருங்கல் கொண்டு கோயில்கள் அமைக்கப்பட்டன ஆரம்பத்தில் மண், தளிகளினாலும், மரங்களினாலும் அமைக்கப்பட்டன.
• இக்கால கோயில்கள் சதுர வடிவான இறையகம் முக மண்டபம், தாழ்வாரம் என்ற மூன்று அம்சங்களை கொண்டது.
• கட்டக் கலையின் பல்வேறு பரிமாணங்கள் சிகரக் கோயில் - தியோகா தசாவதாரக் கோயில் பட்டாரி மகாதேவக் கோயில் , வீதர் கோன் மட்டளரி
• சிற்பம், நடனம், இசை முதலிய கலைகளின் வளர்ச்சிகள் (7 +7+6=20 புள்ளிகள்)

(03) அ) • பக்தி இயக்கத்தின் பெரு வளர்ச்சி அது பற்றிய விளக்கங்கள்

- பல்லவ மன்னர்கள் இந்து சமய நெறியை அரச நெறியுடன் இணைத்தமை
- அரச சடங்குகள் வைதீக மரபில் மேற்கொண்டமை
- வைதீக கல்விக்கு முக்கியத்தும் கொடுத்தமை
- கலைகளின் வளர்ச்சிக்கும், இதிகாச புராணங்களை போதிக்கும் நிறுவனங்களுக்கு உதவி புரிந்தமை
- காஞ்சி கடிகைஸ்தானங்களை உருவாக்கியமை
- இந்து சமய கலாசார மரபை வளர்த்தமை
- கருங்கற்களால் ஆலயங்கள் அமைக்கப்பட்டமை
- ஆகம விதிப்படி ஆலயங்கள் எழுச்சி பெற்றமை
- சைவத்தின் வளர்ச்சியால் புறச் சமயங்கள் தளர்ச்சி பெற்றன
- நாயன்மார்களின் அற்புதங்கள், சமய வாதங்கள் சைவ சமய வளர்ச்சிக்கு உந்து சத்தியாக விளங்கியமை
- திருப்பதிகங்கள் பாடுதல் எழுச்சி பெற்றமை
- பக்தி இலக்கியங்களின் எழுச்சி
- பதிகங்களில் இறைவனின் அருட் செயல்கள், சிறப்புக்கள் பெருமைகள் கூறப்பட்டன
- பக்தி நெறியில் மன்னர்கள் தம்மை இணைத்துக் கொண்டமை
- வைணவ நெறி வளர்ச்சிக்கு ஆழ்வார்களின் பணிகள்
- விண்ணகரங்கள் மீது ஆழ்வார்கள் திருப்பாசுரங்களைப் பாடியமை

ஆ) • போதனைகளுக்கு சாதனை வடிவம் கொடுத்தமை ஏனைய மதங்கள் துறவை வற்புறுத்த நாயன்மார்கள் இல்லறத்திலிருந்து கொண்டே இறைவன் மீது பக்தி கொண்டால் அவனை அடையாலம். என்பதை தமது வாழ்க்கையினுடாக எடுத்துக் காட்டினார்கள்.

- இசை கலந்த பாடல்களை பாடியமை இறைவனின் பெருமைகள் சிறப்புக்களை திருப்பதிகம் மூலம் பாடி மக்களை தம்பால் ஈர்த்தனர்.
- குல வேறுபாடுகளுக்கு இடமளிக்காது செயற்பட்டமை தொண்டர் குலமே தொழுகுலம் என்ற சிந்தகையில் பணியாற்றியமை.
- நாயன்மார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலையில் நின்று வாழ்ந்து காட்டியமை

  அப்பர் - தாசமார்க்கம்
  சம்பந்தர் - சற்புத்திர மார்க்கம்
  சுந்தரர் - சகமார்க்கம்
  மாணிக்கவாசகர் - சன்மார்க்கம்
- அற்புதங்களை நிகழ்த்தியமை சில அற்புதங்களை குறிப்பிடல்
- மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை தமக்கு ஏற்பட்ட துன்பமாக கருதி அதனை நீக்க முற்பட்டமை பாடல்கள் அற்புதங்களை குறிப்பிட்டு எழுதல் வேண்டும்.

(10+10=20 புள்ளிகள்)

(4) அ) • ஆன்மா உலகு ஆகிய இரு அம்சங்களை விசேடணங்களுடன் கூடியவர் இறைவன் என்னும் கருத்து

- விசேடமான விளக்கத்தையுடைய அத்வைதம் விஷ்ணுவே பிரம்மம் என்னும் கோட்பாடு பரம்பொருள் ஈஸ்வரத்துவமாக விளங்கும் நிலை

ஆ) • உலகு, உயிர், இறைவன் ஆகிய மூன்றும் உண்மையானவை

- உலகும் உயிரும் பிரமத்திற்கு விசேடணங்கள் பிரமம் அவ் விசேடணங்களையுடைய விசேடியம்
- தத்துவத்திரயம் - அசித், சித், ஈஸ்வரன் எனும் மூன்றும் உண்மை எனக் கொள்கின்றார்
- இறைவனுக்கும் உயிருக்கும் இடையிலான தொடர்பு சரீர சரீரி சம்பந்தமாகும்
- உயிர்கள் இறைவனது உடலாகவும் இறைவன் அவ்வுடலுக்குரிய உயிராகவும் கருதப்பட்டது.
- இறைவன், உலகு, உயிர் இம் மூன்றையும் ஒன்று சேர்த்து அப்பிரதக் சித்தி எனக் குறிப்பிடுகின்றார்.

- திருமாலுக்கு ஈஸ்வர தத்துவம் வழங்கிய சிறப்பு இவ்வேதாந்தத்திற்குரியது
- ஆன்மாக்கள் பல அவை நித்தியமானவை இதுவும் அவரது கொள்கையில் ஒரு சிறப்பம்சமாகும்

இ) • சங்கரரது அத்வைத்தம் பிரமம் ஒன்றே உண்மை என விளக்குவது எனவே ஏகான்மவாதம்

- சங்கரர் அத்வைதம் - உலகு, உயிர் போன்றவை பொய்க்காட்சி எனக் கூற விசிட்டாத்வைதம் உலகும் ஆன்மாக்களும் இறைதத்துவத்தில் இணைந்திருந்தலைக் கூறுகின்றது.
- பக்தி நெறியில் அத்வைதம் - விவர்த்தவாத ஒருமையை விளக்க விசிட்டாத்வைதம் - பரிணாமவாத ஒருமையை விளக்குகின்றது.
- இராமானுஜர் ஸ்ரீவைகுண்டமடையும் ஆன்மாக்களே முத்தி பெறுவன எனக் கூறுகின்றார் - அதுவே மோட்சம் என்பது அவரது கருத்து
- சங்கரர் ஏகமேயான பிரம்ம நிலையை அடைவதே மோட்சம் என்றும் அதனை அடைய ஞானமே முக்கிய வழி என்றும் கூறுகின்றார்.

ஈ) • பிரபக்தி என்னும் சரணாகதி தத்துவம் சிறப்பம்சம், அதன் மூலம் பரமபதம் என்ற வீடுபேறு

- கருமம், பக்தி, ஞானம் ஆகியவை முக்கியமானவை
- ஆலய வழிபாடு நிஷ்காமிய கன்மம், தீட்சை போன்றவை குறிப்பிடத்தக்கன.

(3+6+6+5=20 புள்ளிகள்)

(5) அ) • சோழர் காலக்கட்டிடக் கலை வளர்ச்சியினை நான்கு கால கட்டமாக வகைப்படுத்திக் கொள்ளலாம்

1) விஜயாலயன் முதல் பராந்தகன் வரையுள்ள காலம் (கி.பி 850 - 950 வரை)
2) பராந்தகன் முதல் இராஜராஜன் வரையுள்ள காலம் (கி.பி 950 - 1000 வரை)
3) இராஜராஜன் முதல் முதலாம் குலோத்துங்கள் வரையுள்ள காலம் (கி.பி 1000 - 1070 வரை)
4) முதலாம் குலோத்துங்கள் முதல் மூன்றாம் இராஜேந்திரன் வரையுள்ள காலம் (கி.பி 1070 -1250)

✳ முதலாம் கட்டத்தில் எழுந்த ஆலயங்கள் அளவில் சிறியதாக அமைந்தது. அவை பல்லவர் காலப் பாணியை அடித்தளமாகக் கொண்டவை. விஜயாலய சோழேச்சரம், ஆதித்த ஈஸ்வரம் மூவர் கோயில், திருச்சிராப்பள்ளி, ஸ்ரீநிவாஸ் நல்லூரில் உள்ள கோரங்க நாதர் கோயில் குறிப்பிடத்தக்கவை. இவை ஆகம மரபு சார்ந்தவை, வனப்புமிக்க அதிஷ்டானம் அர்த்த மண்டபம், விமானம்,தேவகோஷ்டம் ஆகிய அம்சங்கள் முக்கியமானவை

✳ இரண்டாம் கட்டத்தில் எழுந்த ஆலயங்கள் அளவில் பெரிமாகவும், தூண் அமைப்புக்களில் அலங்கார வேலைப்பாடுகள் கொண்டதாகவும் காணப்பட்டது. பாடல் பெற்ற தலங்கள் புனர் நிர்மானம் செய்யப்பட்டது. இக்காலத்தினை செம்பியன் மாதேவிக் காலம் என்றும் சிறப்பித்துக் கூறப்பட்டது.

✳ மூன்றாம் கட்டத்தில் எழுந்த ஆலயங்கள் அபார வளர்ச்சியினைக் கொண்டிருந்தது. தஞ்சைப் பெருவுடையார் ஆலயம், கங்கை கொண்ட சோழேஸ்வரம் கட்டிடக்கலையின் புதியதொரு பரிமானத்தைக் கொண்டு விமானம், மண்டம், தூபி, தூண்கள், சுற்றுப்பிரகாரம் போன்றன அமைக்கப்பட்டது.

✳ நான்காம் கட்டத்தில் எழுந்த ஆலயங்கள் பல வேலைப்பாடுகள் கொண்டதாகத் தோற்றம் பெற்றன. தாராசுரம், திரிபுவனம், ஐராவதேஸ்வரம், கம்பஹரேஸ்வரர்,அமிர்த கடேஸ்வரர், சூரியனார் கோயில் போன்றன அமைக்கப்பட்டாலும் சோழர்காலப் பாணியின் முதிர்ச்சியாகவே விளங்கின. விமானம் மண்டபம், சுற்றுப்பிரகாரம், நூறுகால் மண்டபம், ஆயிரம் கால் மண்டபம், திருச்சுற்றுமாளிகை, ஏழுநிலை கோபுரம் முதலியன அமைக்கப்பட்டன.

ஆ) ✳ விமானங்கள் ஏகதாளம், துவிதளம் முதலாக பதினைந்து தளவரிசைகளைக் கொண்டிருந்தன.
✳ விமானங்கள் உயரமாக அமைந்தன.
✳ தஞ்சைப் பெருவுடையார் கோயில் திராவிட கட்டடக் கலையின் நிறைவான வளர்ச்சிக்குச் சான்று
✳ தஞ்சைப் பெருவுடையார் விமானம் 216 அடி உயரமும் பதினைந்து தளங்களையும் கொண்டது
✳ முழுமையான கருங்கற் சிற்பங்கள் விமானத்தை அழகுபடுத்துகின்றன.
✳ விமானத்தில் 82 நாட்டிய காரணங்கள் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது
✳ விமானத்திலுள்ள பிரமந்தக்கல் 25 1/2 சதுர அடி கொண்டதாகும்
✳ கங்கை கொண்ட சோழேஸ்வர விமானம் 186 அடி உயரமும் 08 தளங்களையும் கொண்டது எழில் மிக்க சிற்ப அலங்காரங்களும், சித்திர வேலைப்பாடுகளும் மிகுதியாக காணலாம்
✳ புராண கதைகளைப் பிரதிபலிக்கும் சிற்பங்கள் விமானத்தை அலங்கரிக்கின்றது.

(12+8=20 புள்ளிகள்)

(6) ✳ நவீன சீர்திருத்த இயக்கங்கள் தோற்றம் பெற்றமைக்கான காலச் சூழல்
✳ சமூகக் குறைபாடுகளை இனம் கண்டு அவற்றை நீக்குவதன் மூலம் இந்து சமூகத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தின.
✳ இந்து சமூகத்தில் உள்ள மூடப் பழக்க வழக்கங்கள் அறியாமை என்பவற்றை நீக்கி அறிவை வளர்த்து ஆன்மீக வளர்ச்சிக்குரிய வழிகளை அறியச் செய்தன.
✳ சமத்துவம் பேணல், சமூக மேம்பாடு, சமயப் பொதுமை ஆன்மீகப் பொதுமை, சமய சமரச நெறி, இந்துக் கல்வி விருத்தி என்பவற்றை ஏற்படுத்தின.

✳ <u>ராஜராம் மோகன்ராய்</u>
- இவர் சமஸ்கிருதம், வங்காளம், ஆங்கிலம், அரபு பாரசீகம் என்பவற்றில் புலமை மிக்கவர்
- கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியவற்றின் மூல நூல்களைக் கற்றவர்
- உபநிடதங்களே மூலாதாரமானவை அவற்றின் அடிப்படையிலேயே சமயாசார சிந்தனை அமைய வேண்டும் என்பதே அவர் கொள்கை
- சமய சிந்தனை அறிவியல் நோக்கில் அமைய வேண்டும் என வலியுறுத்தினார்
- மூட பழக்க வழக்கங்களை கண்டித்தார்
- உடன் கட்டையேறல் என்னும் சம்பிரதாயத்தை சதி என்னும் சட்டத்தின் மூலம் தடுத்தார்
- விக்கிரக வழிபாட்டை கண்டித்தார்
- பிறப்பால் பிராமணராயினும் வர்ண தர்மங்களை வெறுத்தொதுக்கினார்
- பாலியல் விவாகத்தை தடுத்து விதவை விவாகத்தை ஆதரித்தார்
- கடல் கடந்த பாரம்பரியத்தைத் தடுத்தார்
- தனது கொள்கையை நிலை நிறுத்த பிரம சமாஜத்தை ஊடகமாகக் கொண்டார்

✳ <u>தயானந்த சரஸ்வதி</u>
- இவர் ஆரிய சமாஜத்தின் மூலம் தமது கொள்கையைப் பரப்பினார்
- வைதீக சமயம் சார்ந்ததாகவே இவரது கோட்பாடுகள் அமைந்திருந்தன
- விக்கிரக வழிபாட்டை எதிர்த்தார்
- சமஸ்கிருதப் பாடசாலைகளை ஏற்படுத்தினார்
- இந்துக்களின் சமய உணர்வு மேலோங்கக் காரணமாய் இருந்தார்
- வர்ண ஒழிப்பு. விதலை மறுமணம், கல்வியைப் பரப்பல் சமூகத் தொண்டுகளை ஏற்படுத்தல் என்பன ஆரிய சமாஜம் மேற்கொண்டது
- இவரது சிந்தனைகளை காலத்திற்கேற்ற வகையில் யாதார்த்த பூர்வமாக அவரது சீடர்கள் நிலைநாட்டினர்.

✳ <u>இராமகிருஸ்ண பரமஹம்சர்</u>
- இவர் குலத்தால் அந்தணர் வழிபாட்டால் சாக்தர்
- வேதாந்தக் கருத்துக்களுக்கு முதன்மை அளித்தவர் உபகதைகள் மூலம் இந்துசமய தத்துவக் கருத்துக்களை பாமர மக்களும் விளங்கும் வண்ணம் எடுத்துக் கூறினார்.

- இவரது சமயஞானம் பரீட்சார்த்தமான அனுட்டானங்களாக உள்ளன.
- எம்மதமும் சம்மதம் எனக் கொண்டவர்
- பக்தியோகம், நாம உச்சாடனை விக்கிரக ஆராதனை, மதங்களின் ஒற்றுமை உணர்வு , சரணாகதி என்பன அவரது சமய வாழ்வில் சிறப்படைந்தன.
- இராமகிருஸ்ணரின் பிரதான சீடரான விவேகானந்தர் குருவின் பெயரை உலகளாவிய ரீதியில் பரவச் செய்தார்.
- இராமகிருஸ்ணர் தனது ஆத்மீக சக்திகளை முற்றாக இவருக்கு வழங்கினார்
- இவர் நவசங்கரராகத் திகழ்ந்தார்
- இந்துக்களிடையேயும், சமயங்களிடையேயும் சமரசத்தை வலியுறுத்தினார்
- இந்துக்களிடையே உள்ள சமய சிந்தனைக்கு கவர்ச்சிகரமான நவீன விளக்கம் அளித்தார்
- தனது கொள்கைகளையும், சிந்தனைகளையம் சாதனைப்படுத்தும் வண்ணம் இராம கிருஷ்ணமிஷனை தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் உருவாக்கினார்.
- வேதம், தத்துவ சாஸ்திரம் என்பவற்றை துணை போகக்கற்று, அவற்றின் சாராம்சங்களை நூல்களிலும், அருள் உரைகளிலும் விளக்கினார்.
- ஞானதீட்சை, வித்தியாரம்பம் முதலிய பாரம்பரியமுடைய துறவியர் சங்கத்தை ஏற்படுத்தி அதனை இந்து சமுதாயத்தில் முதன்மை வாய்ந்த குருபீடமாக ஆக்கினார்.
- 20ம் நூற்றாண்டு இந்து சமுதாயத்தில் பொதுமை உணர்ந்த சமயப் பாரம்பரியம் ஏற்பட்டதென்றால் அதன் காரணகர்த்தா விவேகானந்தரே ஆவார். (20புள்ளிகள்)

(7) அ)
- இறைவன் குருவாக எழுந்தருளிய வடிவமே தட்சணாமூர்த்தி வடிவமாகும்
- தட்சணாமூர்த்தி வடிவ வகை -04
  1) யோக தட்சணாமூர்த்தி 2) ஞான தட்சணாமூர்த்தி
  3) வியாக்கியான தட்சணாமூர்த்தி 4) வீணாதர தட்சணாமூர்த்தி
- இவற்றில் வியாக்கியான தட்சணாமூர்த்தியே சிவாலயங்களில் கூடுதலாக நிறுவப்பட்டுள்ளது.
- கல்லால மர நிழலின் கீழ் புலித்தோல் மூடப்பட்ட இருக்கையின் மீது அமர்ந்த தோற்றம்
- பத்மாசனம் வலது கால் கீழே தொங்க இடதுகால் மடிந்து தொடையின் மீது பொருந்தும்
- முக்கண், நான்கு தோள்கள், முன்வலது கரம் சின் முத்திரையைக் கொண்டு விளங்கும்
- இடதுகரம் வரதம் அல்லது தண்டம் மற்றொரு வலது கரம் உருத்திராக்கமாலை
- இன்னோர் இடக்கரம் பாம்பு
- சடாபாரம், சடாபந்தம், சடாமண்டலம், சடாமகுடம் என்பவற்றுள் யாதாயினும் ஒன்றை இம் மூர்த்தம் கொண்டிருக்கும்.
- கங்கை,மதி, கபாலம், கொன்றை காணப்படும்
- திருமுகம் சாய்ந்த நிலையிலும் திருநயனம் தியாக பாவனையில் மூக்கு நுனியை நோக்கிய நிலையிலும் திருமேனி பளிங்கு போன்ற வெண்ணிறத்திலும் விளங்கும்.

ஆ)
- முனிவர்களின் சந்தேகம் நீக்க சின்முத்திரையை இறைவன் காட்டினார்.
- சுட்டு விரலையும் பெரு விரலையும் ஒன்று சேர்த்து ஏனைய மூன்று விரல்களையும் தனித்து நிறுத்தி சின் முத்திரை காட்டினார்.
- பெருவிரல் - இறைவன்
  சுட்டு விரல் - ஆன்மா
  ஏனைய மூன்று விரல்கள் - ஆணவம்,கன்மம், மாயை
- சின்முத்திரை மூலம் முப்பொருள்களின் இயல்புகளையும் பசு பாசத்திலிருந்து நீக்கி பதியை அடைதலையும் முத்தியின் இயல்புகளையும் உணர்த்தி அருள்புரிந்தார்.
- இறைவன் மலங்களுக்கு அப்பாற்பட்டவர்
- சச்சிதானந்த நிலை - இறைவனது ஞானவடிவம்
- யோகம், கூத்து, இசை முதலிய கலைகளைப் பயில்வோர் தட்சணாமூர்த்தியை வழிபடுபவர்

இ)
- ஆலயத்தின் கருவறையின் தெற்குப்பக்கத்து வெளிச்சுவரில் அமைந்த மாடத்தில் தெற்கு முகமாக விளங்கும்படி நிறுப்படுதல் மரபாகும்.
- தென்முகக் கடவுள் என்றும் அழைப்பர் (10+8+2=20 புள்ளிகள்)